1978 செப்டம்பர் 7]

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் உடனெழுத்தர்கள்

* வினு 72—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்படும் இளநிலை எழுத்தர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் தகுதிவாய்ந்த உடனெழுத்தர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து நியமனம்செய்யப் பட வேண்டுமென அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசிலனையில் உள்ளது.

சேலம்-நாகை விரைவுப் பேருந்து வழித்தடம்.

* வினு 73—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) சேலம்-நாகை வழித்தடத்தில் (ஆத்தூர்-கும்ப கோணம் வழி) இயக்கப்பட்டு வந்த பல்லவன் விரைவுப் பேருந்துகள் நிறுத்தப்பட்டதன் காரணம் யாது ?

(ஆ) இதனை மீண்டும் துவங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சேலம்-நாகை (வழி ஆத்தூர், கும்பகோணம்) வழித்தடத்தில் இயங்கி வந்த விரைவுப் பேருந்துகள் இலாபகரமாக இல்லாததாலும், தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கி வந்ததாலும். 1-2-77 முதல் நிறுத்தப் பட்டுள்ளது.

(ஆ) இதனை மீண்டும் துவக்குவதற்கான சூழ்நிலை இல்லை.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, பல்லவன் போக்கு வரத்துக் கழகம் சேலம்-நாகை வழித்தடங்களில் முதலிலே $6\frac{1}{4}$ மணிக்கு ஒரு வண்டியும் பிறகு $3\frac{1}{4}$ மணிக்கு ஒரு வண்டியையும் விட்டு வந்தது. ஆனல் இந்தக் கேள்வியைப் போட்டதற்குப் பிறகு இரண்டு மாதங்கள் காலையிலே விடப் பட்ட பேருந்து இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. வண்டிகள் சரியாக ஓடாததற்குக் காரணம் வசூலாகவில்லை என்பது தான்.

குறிப்பிட்ட வழித்தடங்களில் குறித்த நேரத்திற்கு வண்டிகள் வராத காரணத்தினால்தான் பயணிகள் வராமல் இருந்துவிடுகிறார்கள். ஆகவே சேலம்-நாகை பேருந்துகளை உடனடியாக விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை.)

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, சில முக்கியமான வழித்தடங்களில் ஓடுகிற வண்டிகளில் லாபமா நட்டமா என்று பார்க்கக்கூடாது. நட்டம் வருகிறது என்றால் அந்த வண்டியிலே இருக்கிற டிரைவர்கள் கண்டக்டர்கள் ஆகியவர்களைக் கலந்து எந்த முறையிலே ஓட்டினால் லாபம் கிடைக்கும் என்பதை பார்த்து ஓட்டவேண்டுமென்ற முறையிலே நாகையிலிருந்து ஆத்தூர், கும்பகோணம் வழியாக சேலம் சென்று வந்த வண்டிகளை மீண்டும் விடுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இது விரைவுப் பேருந்து சம்பந்தப்பட்டது என்ற காரணத்தால் மிகத் தீவிரமாக ஆய்ந்ததன் அடிப்படையிலே நட்டத்தில் ஓடுகிறது என்ற கணிப்புக்குப் போக்குவரத்துக் கழகம் வந்தது. 1-6-76-க்குப் பிறகு தஞ்சையிலிருந்து சேலத்திற்கு சோழன் போக்குவரத்துக் கழகம் தினசரி 2 பேருந்துகளை இயக்கி வருகிறது. தஞ்சைக்கும் நாகப்பட்டிணத்திற்கும் இடையே சோழன் போக்குவரத்துக் கழகம் போதுமான பேருந்துகளை இயக்கி வருகிறது. மேலும் பல்லவன் போக்குவரத்து கழகப் பேருந்துகளும் தஞ்சை-நாகப்பட்டிணத்தை இணைக்கிறது 6 மாத காலத்திற்கு இந்த தடத்தில் பயணிகள் வருகிறவர்கள் எத்தனை பேர்கள் என்று கணித்ததில் 50 சதவிகிதம் பயணிகள் கூட வராத காரணத்தால் மிக நட்டமான நிலைமை ஏற்பட்டது. எனவே இந்த வழித்தடத்தை மீண்டும் துவக்குவதற்கான சூழ்நிலை இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து குடந்தை வழியாக நாகை சென்று வந்த வண்டிகள் மாயூரம் வந்து கொண்டிருந்தது. ஆனால் மாண்புமிகு புலியூரார் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது மாயூரத்திலிருந்த அந்த டெப்போவை, எவ்வளவோ கேட்டும்கூட, நீக்கிவிட்டார்கள். இப்போதுள்ள போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மாயூரத்திலே மீண்டும் டெப்போவை ஏற்படுத்துவதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மூலக்கேள்விக்கு இது சம்பந்தமில்லை என்ற போதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

1978 செப்டம்பர் 7]

திரு. பொ. உத்திராபதி :- பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடம், உப்பு சத்தியாகிரகம் நடந்த இடம் அது. சென்னையிலிருந்து வேதாரண்யத்திற்கு 538-வது எண் பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. அது இடையில் நிறுத்தப்பட்டது. அதுபற்றி அமைச்சர் அவர்களைச் சந்தித்து அதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். அப்படி ஓடிக்கொண்டிருந்த பேருந்து இடையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டிய கேள்வி அல்ல. ஏற்கனவே சொன்னதைப் போல் அமைச்சரவர்கள் இதற்குத் தகவல் கையில் இல்லை என்றுதான் சொல்வார்கள். இது சேலம்-நாகை விரைவு வண்டி பற்றிய பிரச்னை; எனவே, தயவு செய்து தாங்கள் அமருங்கள். அடுத்த வினா 74.

திரு. மு. அம்பிகாபதி : அமைச்சரவர்கள் இதற்குப் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :- நான் தேவையில்லை என்று சொல்லலாம். மூலக்கேள்வியைப் பார்த்து துணைக் கேள்விக்கு அனுமதி கொடுப்பதோ கொடுக்காமல் இருப்பதோ என்னுடைய உரிமை.

மேல்விஷாரத்தில் விரைவுப் பேருந்துகள் நின்று போதல்.

* வினா 74—திரு. துரை முருகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) வடாற்காடு மாவட்டம். மேல்விஷாரத்தில் அரசுப் போக்குவரத்துத் துரித வண்டிகள் நிற்க வேண்டும் என்று விண்ணப்பங்கள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) 17-10-77-முதல் மேல்விஷாரம் வழியாகச் செல்லும் துரிதப்பேருந்துகள் வேண்டுகோளின் பேரில் அங்கு நிறுத்தப்படுகின்றன.